**<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>**

**<u>அ.வ எண்: 20/2012 கற்பகவள்ளி (பிசா 4) தேதி: 23.06.2026.</u>**

**<u>பிசா. 4 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 10ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

பி.சா.ஆ.30 ஆவணத்தில் லேட். சுப்பா நாயக்கர் குமாரர் இந்து வடுகன் விவசாயம் எஸ். அய்யப்ப நாயக்கர் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.27 ஆவணத்தில் ஆவல் நத்தம் சுப்பா நாயக்கர் மகன் அய்யப்ப நாயக்கர் எனக் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ–30, பி.சா.ஆ–27 ஆவணத்தில் கண்ட அய்யப்ப நாயக்கர் என்ற பெயர்கள் வெவ்வேறு நபர்களை குறிக்ககூடியது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.29 ஆவணத்தில் புலஎண். 511/2 பாண்டவர்மங்கலம் கிராமம் காமாஷி செட்டியார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.29 ல் கண்ட காமாஷி செட்டியார் என்பவருக்கு அதில் கண்ட சொத்து பாத்தியப்பட்டு இருந்ததாகவும், அவரிடம் இருந்து சுப்பா நாயக்கர் வாய்மொழியாக கிரையம் பெற்றதாகவும், சுப்பா நாயக்கர் இறப்பிற்கு பின் வாரிசு அடிப்படையில் அவரது மகன் அய்யப்ப நாயக்கருக்கு பாத்தியப்பட்டாதாகவும், அந்த அய்யப்ப நாயக்கர் பட்டா எண். 61 அடிப்படையில் எனது தகப்பனாருக்கு கிரையம் கொடுத்ததாகவும் கூறப்படும சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு கிரையம் கொடுத்த அய்யப்ப நாயக்கர் வாரிசு அடிப்படையில் பட்டா வின் பெயரில் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சுப்பா நாயக்கர் மகன் அய்யப்ப நாயக்கர் அவருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்டது என கூறி என் தந்தைக்கு கிரையம் கொடுத்தார் என்றும்,

ஆனால் மேற்படி அய்யப்ப நாயக்கருக்கு மேற்படி சொத்து அனுபவ பாத்திய அடிப்படையில் பாத்தியம் என்று முன்னுக்குபின் முறனாக சாட்சியம் அளித்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. எனது தந்தை பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் மோசடியானது என்றால் சரியல்ல. 2023 ம் வருடம் மார்ச் மாதம் 2 ம் தேதி எனது தந்தை மனு கொடுத்து 7 நாளில் பட்டா வாங்கிவிட்டார் என்றால் என் தந்தை பெயரில் பட்டா உள்ள விபரம் எனக்கு தெரியும். என் தந்தை பெபயரில் 2.03.2023 தேதியில் மனு கொடுத்து அவரது செல்வாக்கை பயன்படுத்தி 07.03.2023 தேதியில் பட்டா மாறுதல் உத்தரவு கோட்டச்சியரிடம் பெற்றார் என்றால் சரியல்ல. பிராதை மறுத்து குறிப்பிட்டடுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல.

(**இதர பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் மேற்படி 10 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரனையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.**)

**குறுக்கு விசாரணை:** வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.